2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ...............................................................................................

......................................................................................................................................................................

3.0 நிரந்தர குடியிருப்பாளர் வதிவிடத்திற்குரிய :

3.1 மாகாண சபை : .............................................................................................

3.2 மாவட்டம் : ...................................................................................................

4.0 தொலைபேசி இலக்கம்:

நிலையான : | | நடமாடும் : | |

5.0 கல்வித் தகைமைகள்:

1.1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

வருடம் : .................................................... பரீட்சை சுட்டெண் : ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள சித்தி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2. **கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)**

வருடம்: .................................................. பரீட்சை சுட்டெண்: ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள சித்தி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும் )

6.0 **தொழில்சார் தகைமைகள்:**

| *பின்பற்றியுள்ள பாடநெறிகள்* | *நிறுவனம்* | *பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் மட்டம்* | *பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

7.0 **அனுபவம் :**

| *சேவை நிலையம்* | *பதவி* | *சேவைக் காலம்* | |
|---|---|---|---|
| | | *தொடக்கம்* | *வரை* |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

8.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பொருட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகப்பட்டிருக்கிறீர்களா?

( ✓ என்னும் அடையாளத்தை இடவும்)

ஆம் : ☐ இல்லை : ☐

8.1 “ ஆம் ” எனில் , விவரங்களைக் குறிப்பிடவும்:

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

9.0 **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகத் தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்கியொழுகுவதாகவும் உறுதியுரைக்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன் .

....................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ....................................................

10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் மேற்படி 9.0 பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துவரின் கையொப்பம்

திகதி : ....................................................

உறுதிப்படுத்துவரின் பெயர் : ...............................................................

பதவி : ...........................................................................................

முகவரி : ........................................................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும் )

09-75/2

---

**புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

## தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (பகுதித் தொழில்நுட்பம் ) அலுவலர் வகுதியின் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு – 2026

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (பகுதித் தொழில்நுட்பம்) வகுதியின் (PL-2- 2025) பின்வரும் பதவிகளின் பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகளின் படி திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பங்கள் கோரும் கடைசித் திகதிக்கு, அதாவது 30.09.2026 ஆந் திகதிக்கு கீழே உள்ள 3.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *தொடர் இலக்கம்* | *பதவியின் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01. | ஆவணத் தொகுப்பாளர் | 02 |
| 02. | மின்தொழிலாளி | 01 |
| 03. | தச்சுத் தொழிலாளி | 01 |

1.2 **பதவிகளின் கடமைகளின் தன்மை :**

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| ஆவணத் தொகுப்பாளர் | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நூலகத்திற்குரிய அச்சிடப்பட்ட புத்தகங்கள், ஆவணங்கள், கையெழுத்து நூலகப் புத்தகங்கள் மற்றும் சகல வகையான அருங்காட்சி பொருட்களையும் பாதுகாத்தல், தன்னிடம் ஒப்படைக்கப்படும் மேற்கூறிய பொருட்களின் பொறுப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் திணைக்களத் தலைவரால் கையளிக்கப்படும் ஏனைய கடமைகள். |
| மின்தொழிலாளி | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மற்றும் பிரதேச நூதனசாலைகளின் மின்சார விநியோக வழிகளில் ஏற்படும் கோளாறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பழுதுபார்த்தல், நீர்க் குழாய்கள் அமைப்பின் திருத்தவேலைகளை மேற்கொள்ளல் மற்றும் பராமரித்தல், மின்மாற்றியின் செயற்பாடு தொடர்பாக முறையாகக் கண்காணித்தல் மற்றும் திணைக்களத் தலைவரால் கையளிக்கப்படும் ஏனைய கடமைகள். |
| தச்சுத் தொழிலாளி | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்குரிய சகல நிறுவனங்களுக்கும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மரவேலைகளைத் தயாரித்தல், திருத்த வேலைகளை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றல், திணைக்களத் தலைவரால் கையளிக்கப்படும் ஏனைய கடமைகள். |

2.0 **ஆட்சேர்ப்பு முறை :**

தொழில்சார் பரீட்சை முறை மற்றும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

2.1 3.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே தொழில்சார் முறைப் பரீட்சையின் பொருட்டு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 நூதனசாலையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் திறமையின் தொடர் முறையின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினர் தெரிவு செய்யப்படுவர்.

3.0 **தகைமைகள் :**

3.1 **கல்வித் தகைமைகள் :**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| ஆவணத் தொகுப்பாளர் | கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| மின்தொழிலாளி | |
| தச்சுத் தொழிலாளி | |

3.2 **தொழில்சார் தகைமைகள் :**

| *பதவி* | *தகைமைகள்* |
|---|---|
| ஆவணத் தொகுப்பாளர் | உரிய பதவிக்கு ஏற்புடையவாறு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்கல்வித் தகுதிகளில் (N.V.Q) ஆகக் குறைந்த பட்சம் இரண்டாம் நிலைத் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும் . |
| மின்தொழில்நுட்பவியலாளர் | |
| தச்சுத் தொழிலாளி | |

3.3 **உடல் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொருப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போதுமானளவில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும் .

3.4 **ஏனைய தகைமைகள் :**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

III. சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டான திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் பொருட்டு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் விதித்துரைக்கப்பட்டுள்ள வயது எல்லை என்பன விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூரணப்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும்.

4.0 **வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக் குறைந்தது 18 வயதுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆகக் கூடிய வயது 45 வயதுக்குக் மேற்படாதிருத்தல் வேண்டும்.

5.0 **சேவையில் சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

5.1 இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதவைகள் தாபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் உட்படல் வேண்டும்.

5.2 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

5.3 III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடையதல் வேண்டும் .

5.4 அரச கரும மொழிக் கொள்கைக்குரிய 16.10.2020 ஆந் திகதிய 18/2020 என்னும் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய, அரச கரும மொழித் தேர்ச்சியை விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

6.0 **சம்பள அளவு :**

இப் பதவியின் பொருட்டு, 10/2025, என்னும் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையில், PL-2-2025 இற்கமைய, ரூபா 41,800.00-10x490-10x540-10x590-12x630 – ரூபா 65,560.00 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் உபஅட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி, நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

7.0 **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப நிலை ( பகுதித் தொழில்நுட்பம்) அலுவலர் வகுதியின் ( PL-2-2025) பதவியின் பொருட்டான தொழில்சார் முறைப் பரீட்சையின் போதும் மற்றும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையின் போதும் பின்வரும் நடைமுறைகளின் படி புள்ளிகள் வழங்கப்படும் .

7.1 **தொழில்சார் முறைப் பரீட்சை :**

| *விடயம்* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *சித்தியின் பொருட்டான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| துறைசார் தொடர்பான அறிவைச் பரிசோதித்தல் | 100 | 5 0% |

7.2 **கட்டமைப்பு நேர்முகப்பரீட்சை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *சித்தியின் பொருட்டான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையதற்றது |
| 2. மேலதிக அனுபவம் | 60 | |
| 3. துறைசார்ந்த, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பின்பற்றப்பட்டுள்ள மேலதிகமான பாட நெறி மற்றும் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள் | 20 | |
| 4. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் போது வெளிப் படுத்தப்பட்ட திறன்கள் மற்றும் ஆளுமையின் பொருட்டு | 05 | |
| மொத்தம் | 100 | |

** குறிப்பு :

தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குக் கலந்து கொள்ளல் நியமனம் வழங்குவதற்குத் தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படமாட்டாது.

8.0 **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய, 21 x 29 செ.மீ (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தாமாகவே விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும்.

8.2 விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாதுள்ள மற்றும் முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எவ்விதமான அறிவித்தல்களும் இல்லாது நிராகரிக்கப்படும்.

8.3 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் குறித்து விடுக்கப்படும் எவ்விதமான முறைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

8.4 நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பு விடுக்கப்படுவது, விண்ணப்பதாரர் இப் பதவியின் பொருட்டு தமைமையைக் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.5 விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவிக்கமையத் "தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கனிஷ்ட ( பகுதித் தொழில்நுட்பம்) வகுதியின் …………................... பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.6 விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 06/2006 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் தரப்படுத்தலின் படி, மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தின் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.7 இவ்வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தானதாகும்.

9.0 **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 30.09.2026 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
இலக்கம். 53,
சேர் மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு - 07.

10.0 **தொழில்சார் முறைப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் :**

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்ததன் பின்னர், தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு தொழில்சார் முறைப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

அழைப்புக் கடிதத்தைச் சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தொழில்சார் முறைப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்படமாட்டாது.

11.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

தொழில்சார் பரீட்சைக்கும் மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றும் சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சை சபை திருப்தியடையும் விதத்தில் விண்ணப்பதாரர்கள், தங்கள் ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

12.0 **தவறான தகவல்களை வழங்குதலின் பொருட்டான தண்டனை :**

பரீட்சார்த்தி ஒருவர் இத் தொழில்சார் முறைப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், நேர்முகப்பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது நேர்முகப்பரீட்சையின் போது அல்லது நேர்முகப்பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தவறான தகவல்கள் தவறானது எனத் தெரிந்தும் சமர்ப்பித்திருப்பது தெரியவந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கனிஷ்ட (பகுதித் தொழில்நுட்பம்) அலுவலர் வகுதியின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறை விதி மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப் பதவியின் பொருட்டு ஏற்புடையதாகும்.

14.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்பட்டுள்ள இவ்அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15.0 இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்படும்.

சனுஜா கஸ்தூரிஆரச்சி,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

2026, ஓகத்து 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (பகுதித் தொழில்நுட்பம் ) அலுவலர் வகுதியின் ....................... ........... பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு – 2026**

(அலுவலக பாவனையின் பொருட்டு மட்டும்)

1.0

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : (முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில் ) உதா. : PERERA A.B.C.

.............................................................................................................................................

1.2 முழு பெயர் : ( ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)

.......................................................................................................................................................

1.3 முழுப் பெயர் : ( சிங்களம் / தமிழில் ) ..........................................................................................

...........................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

1.5 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

1.6 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

1.7 பாலினம் : ( ஆண் - M, பெண் - F ) ☐

1.8 திருமணமானவர் / திருமணமாகாதவர் : திருமணமானவர் : ☐ திருமணமாகாதவர் : ☐

( ✓ என்னும் அடையாளத்தை இடவும்)

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்: ........................................................................................

...........................................................................................................................................

2.2 சிங்களத்தில் / தமிழில்: ............................................................................................................

...........................................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ...................................................................................
...................................................................................................................................................................

3.0 நிரந்தர குடியிருப்பாளர் வதிவிடத்திற்குரிய :

3.1 மாகாண சபை : ..........................................................................................................

3.2 மாவட்டம் : ...............................................................................................................

4.0 தொலைபேசி இலக்கம்:

நிலையான : ☐ நடமாடும் : ☐

5.0 **கல்வித் தகைமைகள்:**

1.1. **கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)**

வருடம் : .................................................... பரீட்சை சுட்டெண் : ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2. **கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்)**

வருடம்: .................................................... பரீட்சை சுட்டெண்: ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும் )

6.0 **தொழில்சார் தகைமைகள்:**

| *பின்பற்றியுள்ள பாடநெறிகள்* | *நிறுவனம்* | *பெற்றுக் கொண்டுள்ள தொழில்நிலை மட்டம்* | *பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

7.0 அனுபவம் :

| *சேவை நிலையம்* | *பதவி* | *சேவைக் காலம்* | |
|---|---|---|---|
| | | *தொடக்கம்* | *வரை* |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பொருட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகப்பட்டிருக்கிறீர்களா?

( ✓ என்னும் அடையாளத்தை இடவும்)

ஆம் : ☐ இல்லை : ☐

8.1 " ஆம் " எனில் , விவரங்களைக் குறிப்பிடவும்:

...........................................................................................................................................................................
...........................................................................................................................................................................

9.0 விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் திறமை மதிப்பீடு நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகத் தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்கியொழுகுவதாகவும் உறுதியுரைகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன் .

....................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ....................................................

10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துவரின் கையொப்பம்

திகதி : ....................................................

உறுதிப்படுத்துவரின் பெயர் : ..............................................................

பதவி : ..........................................................................................

முகவரி : .......................................................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும் )

09-75/3

## இலங்கை நிரந்தர கடற்படையின் குறுகிய கால அதிகாரிகள் மற்றும் தன்னார்வ கடற்படை

## நேரடி நுழைவு அதிகாரிகள் (ஆண் / பெண்) பதவி வெற்றிடங்கள் – 2026

1. இலங்கை நிரந்தரநேரடி நுழைவு அதிகாரிகளுக்கான (ஆண்/பெண்) பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிரந்தர கடற்படை நேரடி நுழைவு மற்றும் குறுகிய கால அதிகாரிகளுக்கான நேரடி நுழைவு (05 வருடகால சேவைக்காக)

அ. நிர்வாக பிரிவு

ஆ. கடல்சார் பொறியியல்

இ. கப்பல் கட்டுமான பொறியியல்

ஈ. வாகன பொறியியல்

உ. விநியோக பிரிவு

ஊ. மின் மற்றும் மின்னியல் பொறியியல்

எ. சிவில் பொறியியல்

ஏ. மருத்துவப் பிரிவு

ஐ. பல் மருத்துவம்

ஒ. தகவல் தொழில்நுட்பம்

ஓ. நிர்வாக அதிகாரி சுகாதாரம்

**தன்னார்வ கடற்படை நேரடி நுழைவு :**

அ. நிர்வாக அதிகாரி (பொது கடமைகள்)

ஆ. நிர்வாக அதிகாரி (ஆங்கில ஆலோசகர்)

இ. நிர்வாக அதிகாரி (கணக்கு அதிகாரி)

ஈ. உளவியல் ஆலோசகர்

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்:**

அ. க.பொ.த. (உ. / த.) பரீட்சையில் முதலாம் அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா. / த.) பரீட்சையில் கணிதம், தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (C) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தாய்மொழி பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில மொழியில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

4. **உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:**

அ. **நிறைவேற்றுப் பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு)**

**பதவிநிலை** : துணை லெப்டினன்ட் (ஆண்)

**கல்வித் தகைமைகள்** : பௌதிகவியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல், பொறியியல் தொழில்நுட்பம் பாடத்தின் கீழ் (க.பொ.த.) (உ./த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட பாடப்பிரிவை சேர்ந்த (க.பொ.த.) (உ/த) தேர்வில் பௌதிகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத் தில் விஞ்ஞானத்தில் அல்லது பொறியியல் தொழில்நுட்பத்தில் பொது பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஆ. **கடல்சார் பொறியாளர் (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் கடல்சார் பொறியியல் அல்லது இயந்திரப் பொறியியலில் BSc. நான்கு வருட முழுநேரப் பட்டம்.

இலங்கை பொறியாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவ உறுப்பினராக இருத்தல். பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம் மேலதிக தகுதியாக கருதப்படும்.

**வயது** : 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

இ. **கப்பல் கட்டுமாண பொறியியல் (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவின் கீழ் சாதாரண பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஈ. **வாகன பொறியியல்; (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள் :** இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் இயந்திர பொறியியல் பிரிவில் BSc. நான்கு வருட முழுநேரப் பட்டம்.

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவ உறுப்பினராக இருத்தல்.

பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம் மேலதிக தகுதியாக கருதப்படும்.

**வயது** : 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

உ. **விநியோக பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை :** துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

**கல்வித் தகைமைகள்** : ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் (ஒரே அமர்வில்) திறமை சித்தி (C) பெற்றிருப்பதுடன் க.பொ.த (உ/த) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், வர்த்தக பொருளாதாரம், சொத்து நிர்வாகம் மற்றும் மதீப்பீடு ஆகியவற்றில் பட்டம் பெற்றிருத்தல்.

**வயது :** 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஊ. **மின் மற்றும் மின்னியல் பொறியியல் துறை (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

கல்வித் தகைமைகள் : இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மின்சாரம், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு ஆகியவற்றில் நான்கு வருடகால பொறியியலில் பட்டப்படிப்பு / B-Tech பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது :** 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை :** லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள் :** இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மின்சாரம், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு ஆகியவற்றில் நான்கு வருடகால பொறியியலில் பட்டப்படிப்பு / B-Tech பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தில் AMIE (SL) அங்கத்துவ உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 03 வருடகால அனுபவம் தேவை.

**வயது :** 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

எ. **சிவில் பொறியியல் (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் நான்கு வருடகால சிவில் பொறியியல் BSc. முழு நேரப்பட்டப்படிப்பு.

இலங்கை பொறியியலாளர்கள் கவுன்சில் (ECSL) Associate Member முழு அங்கத்துவம் அல்லது உறுப்பினராக இருத்தல்.

பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம் மேலதிக தகுதியாகும்.

**வயது :** 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஏ. **மருத்துவப் பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : அறுவைச் சிகிச்சை லெப்டினன்ட் கமாண்டர் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : MS அல்லது இணையான முதுகலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்படும் மயக்கவியல் முதுகலை பட்டம் ஒரு விசேட தகுதியாகும்.

**வயது** : 45 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை :** லெப்டினன்ட்

**கல்வித் தகைமைகள்** : MBBS அல்லது அதற்கு இணையான தகுதியுடனான தகைமையினை கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது** : 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஐ. **பல் மருத்துவ பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : மிட்ஷிப்மேன் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள் :** பல் மருத்துவ பீடத்தின் 1, 2, 3 ஆவது மற்றும் 04 ஆவது (Semester) முடித்திருக்க வேண்டும். அல்லது 01 ஆவது பல் அறுவைச் சிகிச்சை இளங்கலை (BDS) தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது பல் அறுவைச் சிகிச்சை பட்டபடிப்பின் 03 ஆவது ஆண்டில் படித்துக்கொண்டிருக்க வேண்டும்.

**வயது** : 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை** : வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : பல் மருத்துவ பீடத்தின் 05 ஆவது மற்றும் 06 ஆவது (Semester) முடித்திருக்க வேண்டும். அல்லது 02 ஆவது பல் அறுவைச் சிகிச்சை இளங்கலை (BDS) தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது பல் அறுவைச் சிகிச்சை பட்டப்படிப்பின் 04 ஆவது ஆண்டில் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

**வயது :** 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை** : துணை லெப்டினன்ட்

**கல்வித் தகைமைகள்** : பல் மருத்துவ பீடத்தின் 07 ஆவது மற்றும் 08 ஆவது (Semester) முடித்திருக்க வேண்டும். அல்லது இறுதி பல் அறுவை சிகிச்சை இளங்கலை (BDS) தேர்வில் முதல் பகுதியில் தேர்ச்சி பெற்று தற்போது பல் அறுவைச் சிகிச்சை பட்டப்படிப்பில் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

**வயது** : 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை :** லெப்டினன்ட் ( மருத்துவம்)

**கல்வித் தகைமைகள்** : பல் அறுவை சிகிச்சை இளங்கலை (BDS) பட்டம் அல்லது அதற்கு சமனான தகுதியுடன் இலங்கை மருத்துவ கவுன்சிலில் (SLMC) வழக்கமான பதவியைப் பெற்றிருக்க வேண்டும்.

**வயது :** 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஒ. **தகவல் தொழில்நுட்பப் பிரிவு (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தி (C) யுடன் க.பொ.த. ( உ./த.) பரீட்சையில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் சாதாரண பட்டம் பெற் றிருக்க வேண்டும்.

அல்லது

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட Red hat தகுதி பெற்றவராக, Sun solaris சான்றிதழ் பெற்றவராக அல்லது சான்றழிக்கப்பட்ட Ethical Hacker ஆக இருத்தல் வேண்டும்.

**வயது** : 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை :** துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தி (C) யுடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகத்தில் 03 வருட கால கணினி அறி வியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது :** 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

**பதவிநிலை** : லெப்டினன்ட் (ஆண்/பெண்) தகைமைகள்

**கல்வித்தகைமைகள்:** க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமை சித்தி (C) யுடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு இளங்கலை (Special) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது** : 32 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

ஓ. **நிர்வாக அதிகாரி சுகாதாரம் (நிரந்தர கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித்தகைமைகள்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நர்சிங் அல்லது மருத்துவத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**எதிர்பார்ப்பு** : மருத்துவமனை துறையில் குறைந்தபட்சம் 02 ஆண்டுகள் மேற்பார்வை அனுபவம் பெற்றிருத்தல்.

**பதிவுசெய்திருத்தல்** : சம்மந்தப்பட்ட தொழில் துறைக்கு இலங்கை தாதியர் சபை அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயமாகும்.

**வயது :** 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

க. **நிறைவேற்றுப் பிரிவு - (தன்னார்வ கடற்படை பிரிவு) பொதுக் கடமை :**

**பதவிநிலை :** வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)

**கல்வித் தகைமைகள்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது :** 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ச. **நிறைவேற்றுப் பிரிவு** : **ஆங்கில மொழி ஆலோசனை பிரிவு – (தன்னார்வ கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை :** துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள்** : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை வெளிநாட்டு மொழியாக கற்பித்தல் (TESOL) தொடர்பான பட்டம் அல்லது ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆங்கிலம் கற்பிப்பதில் டிப்ளோமா மற்றும் அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 06 மாத காலம் ஆங்கிலம் கற்பிப்பதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது :** 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ஞ. **நிறைவேற்றுப் பிரிவு - கணக்கு அதிகாரி - (தன்னார்வ கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

**கல்வித் தகைமைகள் :** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது :** 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

ட. **உளவியல் ஆலோசகர் (தன்னார்வ கடற்படை பிரிவு) :**

**பதவிநிலை** : **வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)**

**கல்வித் தகைமைகள்** : உளவியல் ஆலோசனையில் இளங்கலை பட்டபடிப்பு பெற்றிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது மருத்துவமனையில் உளவியல் ஆலோசனையில் 02 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (பதிவு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.)

**வயது :** 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

5. **ஏனைய தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) இலங்கை நிரந்தர / தன்னார்வ கடற்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகள் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| அ. தேசிய இனம் | : இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| ஆ. வயது | : விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதியில் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வயது இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இ. | உயரம் | : ஆண் 5' 6" (167.64 செ.மீ.) குறையாதிருத்தல் வேண்டும். |
| | | பெண் 5' 3" (160.02 செ.மீ.) குறையாதிருத்தல் வேண்டும். |
| ஈ. | நிறை | : ஆண் - 17- 27 குறையாதிருத்தல் வேண்டும். |
| | உடல் திணிவுச் சுட்டி | பெண் - 17- 27 குறையாதிருத்தல் வேண்டும். |
| உ. | மார்பு | : ஆண் - 32' ( 81.28 cm) குறையாதிருத்தல் வேண்டும். |
| ஊ. | பார்வை நிறம் | : எஸ்ரிடீ II (உரிய பார்வை) |
| எ. | பார்வைத் திறன் | : இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி (மருத்துவம், இசைக்குழு மற்றும் விநியோக துறைக்காக 6/12 கண்வில்லைகள் மூலம் 6/6 சரி செய்யப்பட்ட நபர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்) |
| ஏ. | சிவில் அந்தஸ்து | : திருமணமானவர்/ திருமணமாகாதவர் |

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரசாங்க / தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. மேலே 3, 4 மற்றும் 5ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர / தன்னார்வ கடற்படை ஆண்/பெண் உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஆ. இலங்கை கடற்படை தளபதியின் தீர்மானத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இ. அனைத்து உத்தியோகத்தர்களும் (ஆண்/பெண்) கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகின் எந்தவொரு நாட்டிற்கும் இணைக்கப்படுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டம், கடற்படை உத்தரவுகள் மற்றும் குறிப்புகள் மூலம் அமுல்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், இங்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர் (ஆண்/பெண்) ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் ஆண்/பெண் உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணைமுறியொன்றிற்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எ. பயிற்சிக் காலப்பகுயில் ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

ஏ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/ பெண் உத்தியோகத்தர்களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**:

தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்** :

10/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மருத்துவ பிரிவுக்கான கொடுப்பனவுகள்**

| *கொடுப்பனவுகள்* | *மருத்துவப் பிரிவு* | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | *முதன்மை தரம் மருத்துவம்* | *2 ஆம் தர மருத்துவம்* | *2 ஆம் தர பல் மருத்துவம்* | *1 ஆம் தர மருத்துவம் பல் மருத்துவம்* | *துணை நிர்வாக பிரிவு* | *நிர்வாக பிரிவு* | *விசேட தரம்* |
| அடிப்படைச் சம்பளம் | 84,574.00 | 90,673.00 | 82,547.00 | 111,193.00 | 97,192.00 | 117,857.00 | 136,575.00 |
| பணி இடையூறு/ வருகை மற்றும் போக்குவரத்து | 70,000.00 | 70,000.00 | 70,000.00 | 70,000.00 | 70,000.00 | 70,000.00 | 70,000.00 |
| ஓய்வூதியக் கொடுப்பனவு | 1,700.00 | 1,700.00 | 1,700.00 | 3,400.00 | 3,400.00 | 3,400.00 | 3,400.00 |
| ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு | 2,125.00 | 1,700.00 | 1,700.00 | - | - | - | - |
| கூடுதல் சிறப்பு கொடுப்பனவு | 1,500.00 | 1,500.00 | 1,500.00 | 1,500.00 | 1,500.00 | 1,500.00 | 1,500.00 |
| மொழி கொடுப்பனவு | 2,178.00 | 2,193.00 | 2,177.00 | 3,444.00 | 2,632.00 | 3,445.00 | 4,248.00 |
| தொடர்பு திறன் கொடுப்பனவு | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 6,000.00 |
| கூடுதல் சம்பளம் (மணிக்கு) (மாதம் 120) | 795.00 | 967.00 | 967.00 | 1291.00 | 995.00 | 1373.00 | 1542.00 |
| 1/20 கொடுப்பனவு (ஒரு நாள்) (மாததிற்கு நாள் 03 ) | 3,195.00 | 3,435.67 | 3,115.00 | 4,302.33 | 3,749.67 | 4,565.67 | 5,313.33 |
| நிர்வாக கொடுப்பனவு | - | - | - | | 6,000.00 | 6,000.00 | |
| உணவு கொடுப்பனவு | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 |
| **மொத்தம்** | **203,913.80** | **210,015.47** | **201,552.80** | **232,977.13** | **223,315.47** | **245,987.47** | **263,425.13** |

**மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தவிர அனைத்து துறைகளுக்குமான ஊதியம்**

| *விபரம்* | *வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ரூ.)* | *துணை லெப்டினன்ட் (ரூ.)* | *லெப்டினன்ட் (ரூ.)* |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 65,731.00 | 74,438.00 | 86,601.00 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | 525.00 | 525.00 | 525.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| வேறு கொடுப்பனவு | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| உணவுக் கொடுப்பனவு | 34,846.80 | 34,846.80 | 34,846.80 |
| மொத்தம் | 122,902.80 | 131,609.80 | 143,772.80 |

11. **பயிற்சியின் போதும் அதற்கு பின்னரும் உள்ள வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் :**

அ. வெளியிலிருந்து உணவினை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உணவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆ. ஏற்புடையவிடத்து தகைமைக் கட்டணமாக மாதமொன்றிற்கு அதிகபட்சம் ரூ. 637.50 வரை வழங்கப்படும்.

இ. இலவசமாக ரயிலில் பயணிப்பதற்கான விடுமுறை இரயில்வே அனுமதிகளின் மூன்று தொகுப்புக்கள் (உத்தியோகத்தர் (ஆண்/பெண்) வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்) உண்டு.

ஈ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு (ஆண்/பெண்) மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். அல்லது பேருந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

உ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்).

எ. திருமணமானவர்கள் அரசாங்க இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் ரூ. 3,200.00 தொடக்கம் ரூ. 8,500.00 வரையான வீட்டு வாடகைப் படிக்கு உரித்துடையவர்களாவர்.

ஏ. விடுமுறையின் போது சிறப்பு சலுகை

ஐ. அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளில் கடன் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

ஒ. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் உள்நாடு மற்றும் வெளிநாட்டு பயிற்சியில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு

ஓ. பதவி உயர்வின் போது சாரதியுடன் கூடிய அதிகாரபூர்வமான மகிழுந்து வழங்கப்படும்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

அ. விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை, 2026, ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ. எண் 593, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "நேரடி நுழைவு 2026/01 – நிரந்தர'' தன்னார்வ ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு www.navy.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 011-7195155 / 011-7195162 / 0760275685 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அறிவிக்கப்படமாடாது. ஏந்தவொரு விண்ணப்பம் தொலைந்துவிட்டதாகவோ அல்லது பதிவுத் தபாலில் தாமதமாகிவிட்டதாக எந்தவொரு புகாரும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான எந்தவொரு அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

இ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப்படுத்தல் கடிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரிகள், நேர்முகப்பரீட்சையின்போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க்காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும்போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச்சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படும் கல்வி/உயர்கல்வி/தொழிற்கல்வி பட்டத்தகைமைகள் மற்றும் முதுகலைப் பட்டம் பற்றிய சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.

(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்டதொழில்/ தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).

(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து).

(7) விளையாட்டுத்துறைசார் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

உ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஊ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது.

எ. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணால் போகுமாயின், இலங்கை கடற்படை அதற்கு பொறுப்பேற்காது.

13. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவிற்கும் முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்பிற்கு ஆளாவார். தெரிவின் பின் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கத்திற்கு செய்யப்படுவார்.

14. **தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள்**

அ. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) அடிப்படை நேர்காணலுக்குத் தோன்றும் போது உயரம், வயது, கண்பார்வை மற்றும் எடை ஆகியவற்றை சரிபார்க்க ஆரம்ப மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம், வயது, பார்வை மற்றும் எடை ஆகியவற்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பதார்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது தேவைகளுக்கு ஏற்ப இல்லாவிட்டாலும் கடற்படை சேவைக்கு பயனுள்ள சிறப்பு திறன் இருந்தால் அவர் சேவை தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் ஒப்புதலுடன் பரிசீலிக்கப்படுவார். அடிப்படை நேர்காணலில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே பின்வரும் உடல் தகுதித் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படுவார்கள்.

ஆ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்துவதற்கான தேவைப்பாடுகள்

| *நிகழ்வுகள்* | *முறைமை* | | *காலம்* | |
|---|---|---|---|---|
| | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* |
| 1600 மீற்றர் ஓட்டம் (நிமிடங்கள்) | - | - | நிமிடங்கள் 09 | நிமிடங்கள் 11 |
| Push ups | 12 அல்லது அதிகமாகவோ | 08 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |
| Sit ups/curl ups | 10 அல்லது அதிகமாகவோ | 07 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |

இ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் இலங்கை கடற்படை வைத்தியசாலை மூலம் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். முழுமையான மருத்துவ பரிசோதனையில் சித்தியடைவோர் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாவது நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு (ஆண்/பெண்), நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (whatsApp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் இலங்கை கடற்படை மருத்துவ சபையின் முன்பாக தோன்ற வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவர் (ஆண்/பெண்) நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரியொருவரை (ஆண்/பெண்) பரிந்துரை செய்ய விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஐ. விண்ணப்பதாரிகளினால் (ஆண்/பெண்) சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற்தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் உறுதிசெய்யப்படும்.

ஒ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் கடற்படைத் தலைமையகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

15. இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் நேரடி நுழைவு அலுவலர்கள் (ஆண்/பெண்) ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தை கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக்கொண்டிருப்பார்.

**குறிப்பு:** இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

கேடீடீசீடீ பெர்னாண்டோ,
ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீசீ, ஆர்சீடீஎஸ்,
துணைக் கடற்படை தளபதி,
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. எண் 593,
பத்தரமுல்லை.

**இலங்கை கடற்படை- நிரந்தர மற்றும் தன்னார்வ கடற்படையில் ஆண்/பெண் நேரடி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

தேசிய இனம்: ………………………………………………………………………………

(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும்.
பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)

விண்ணப்பிக்கும் பிரிவு / பதவி: …………………………………………………………......

முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு) : ………………………………

தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ………………………………………………………

நிரந்தர முகவரி: ………………………………………………………………………………

தபால் முகவரி: ……………………………………………………………………………………

மின்னஞ்சல் முகவரி: …………………………………………………………………………..

பிறந்த திகதி: ……………………………………………………………………………………

வயது: வருடங்கள்…. மாதங்கள்……… நாட்கள்…………(2026, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிக்கு)

உயரம்………… (அங்குலம்) மார்பு………… (அங்குலம்) நிறை ….(கிலோகிராம்)

நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ் நிலையம்: ……………………………..

மாவட்டம்:…………………………………………………………………………………………

தேர்தல் தொகுதி: ……………………………………………………………………………

கிராம அலுவலர் பிரிவு: …………………………………………………………

தொலைபேசி இலக்கம் (whatsApp): …………………………………………………

சிவில் அந்தஸ்து: …………………………………………………………………………...

பாலினம் :………………………………………………………………………………………

கல்விகற்ற பாடசாலைகள் :…………………………………………………………………

**பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்:**

| *பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர்* | *தோற்றிய பரீட்சை* | *பரீட்சைக்குத் தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக)* |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த)<br>க.பொ.த. (உ.த)<br>ஏனைய | | |

**பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):**

| *தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலம்* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

**பெற்றோர் பற்றிய விபரங்கள்:**

| *முழுப்பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

**பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள்:**…………………………………………………

விளையாட்டுக்களில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக)

பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள் (திகதி, ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும்) …………………………………………………………………………………… ……………………….

ஆயுதப்படை,தன்னார்வபடை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை :……………………………………………………………………

இலங்கை கடற்படையில் இணைவதற்காக நீங்கள் பயன்படுத்திய முறை அல்லது ஊடகத்தினை குறிப்பிடவும் : ……………… ……………………………………………………………………………………

இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும்: ……………………………………………………………………………

சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும் :……………………….................................................... .......................................................................

அரசாங்க திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில்;, பகிரங்கச்சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/ அரசாங்க வங்கிகள் /பல்கலைக்கழகங்கள்/ சிவில் அமைப்புக்கள்/ அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக:………………………………………………………………………………………

**நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:**

| *பெயர்* | *பதவி* | *தபால் முகவரி* |
|---|---|---|
| | | |

**விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:**

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும், சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்வெளிப்படுத்துகின்றேன்.இலங்கைஅரசாங்கத்தின்வர்த்தமானியில்வெளியிடப்பட்டஇலங்கைகடற்படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கைமுறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

……………………………… ………………………………
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பப்படிவத்தை ( தகுதிகள் தொடர்பான ஆவணங்களின் சான்றழிக்கப்பட்ட நகலுடன்) கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

மூத்த பணிப்பாளர் அதிகாரி ( ஆட்சேர்ப்பு),
இலங்கை கடற்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
த.பெ. எண் 593,
பத்தரமுல்லை.

தொடர்பு கொள்ள : மின் அஞ்சல் nhqssorec@gmail.com தொலைபேசி 0117195154, 0117195120

கையடக்கத் தொலைபேசி: 0760275685

09-142

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## (கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

**பதவி : மேலதிக பணிப்பாளர் நாயகம் 01 (கல்வி)**

1. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 25 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க நியாயாதிக்க சபைகள் / நிறுவனங்களில் சேவையாற்றுபவர்களுக்கு இந்த அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

2. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞானத் துறையில் முதற் பட்டம் பெற்றிருப்பதுடன், சமூகப்பணி (Social Work) தொடர்பான முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்**

அரசாங்கம் அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (மேற்குறிப்பிட்ட சேவைக் காலத்தில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் சமூகப்பணி (Social Work) தொடர்பான முதுகலைப் பட்டம் பெற்றதன் பின்னரான காலமாக இருத்தல் வேண்டும்.)

**மேலதிக தொழில்சார் தகைமைகள்**

சமூக சேவை / சமூக நலன்புரி / சமூக அபிவிருத்தித் துறைகளில் நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் சமூகப்பணி தொடர்பான தொழில்சார் அமைப்பொன்றின் (Professional Body) உறுப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தகைமைகள்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சமூக சேவை / சமூக நலன்புரி / சமூக அபிவிருத்தித் துறைகளில் நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் சமூகப்பணி தொடர்பான தொழில்சார் அமைப்பொன்றின் (Professional Body) உறுப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. **நேர்காணலில் புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| | |
|---|---|
| தொடர்புடைய நிருவாக தொழில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100** |

**சம்பள அளவுத்திட்டம்**

HM 2-1 2025 ரூபா 161,140 – 12 x 4,850 – ரூபா 219,340.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

(2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 140,317.00)

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : சிரேஷ்ட விரிவுரையாளர் - 03 (சிங்கள மொழிமூலம் 02, தமிழ் மொழிமூலம் 01)

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 30 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

4. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1 அல்லது 2 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் பெற்ற சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் படிப்பு ஒன்றை (ஆய்வுடன்) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

முதற் பட்டம் பெற்றதன் பின்னர், அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் பெற்ற சிறப்புப் பட்டம்

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான கலாநிதிப் பட்டம் (PhD) ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

முதற் பட்டம் பெற்றதன் பின்னர், அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1, 2 அல்லது 3 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/ சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் / பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் ஆய்வின் மூலம் பெற்ற முதுகலைப் பட்டம் (Master's Degree) பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும்

"கல்வி / ஆய்வு" சேவைப் பிரிவின் (AR-1) கீழ் விரிவுரையாளர் பதவியில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/ சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் / பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் கலாநிதிப் பட்டம் (PhD) பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும்

"கல்வி/ஆய்வு" சேவைப் பிரிவின் (AR-1) கீழ் விரிவுரையாளர் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| | *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| | i. வகுப்புச் சித்திகள் | |
| | ii. பட்டப்பின் படிப்பு (ஆய்வுடனான) | |
| | iii. பட்டப்பின் படிப்பு (ஆய்வு அல்லாத) | |
| 2. | கற்பித்தல் அனுபவம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல்.) | 10 புள்ளிகள் |
| 3. | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | 20 புள்ளிகள் |
| | i. ஆய்வுக் கட்டுரைகள்/ஆய்வு நூல்கள் – சுயாதீனமானவை (non refereed) | |
| | ii. மாநாட்டு அறிக்கைகள்/ஆய்வு அறிக்கைகள் | |
| | iii. சுயாதீன வெளியீடுகள் | |
| | iv. வெளியிடப்பட்ட கல்விசார்/ஆய்வுசார் கட்டுரைகள் – தேசிய/சர்வதேச | |
| 4. | மேலதிக செயற்பாடுகள் | 10 புள்ளிகள் |
| | i. விளையாட்டு | |
| | ii. சமூகசேவை/சங்கங்கள், அமைப்புகள்/சமுதாய நிகழ்ச்சிகள் | |
| 5. | ஆளுமை | 15 புள்ளிகள் |
| 6. | தொடர்புடைய துறை பற்றிய பொது அறிவு | 15 புள்ளிகள் |
| | மொத்தம் | **100 புள்ளிகள்** |
| | * **குறிப்பு**: சமமான தகைமைகள்/சமமான பங்களிப்புகளுக்கு மேற்குறிப்பிட்ட புள்ளிகளில் 50% மட்டுமே வழங்கப்படும். | |

4. **சம்பள அளவுத்திட்டம்**

AR – 2 2025 ரூபா 133,220.00 – 10 x 3600 = ரூபா 169,220.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

(2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 116,763.00 )

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : விரிவுரையாளர் II - 06 (சிங்கள மொழிமூலம் 04, தமிழ் மொழிமூலம் 02)

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

4. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1 அல்லது 2 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான இளமானிப் பட்டம் ஒன்றை பெற்றிருப்பதுடன் குறித்த துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

01. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| | *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| | i. வகுப்புச் சித்திகள் | |
| | ii. பட்டப் பின் படிப்பு (ஆய்வுடனான) | |
| | iii. பட்டப் பின் படிப்பு (ஆய்வு அல்லாத) | |
| 2. | கற்பித்தல் அனுபவம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் பெற்ற குறைந்தபட்ச கற்பித்தல் அனுபவம்) | 10 புள்ளிகள் |
| 3. | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | 20 புள்ளிகள் |
| | i. ஆய்வுக் கட்டுரைகள்/ஆய்வு நூல்கள் – சுயாதீனமானவை (non refereed) | |
| | ii. மாநாட்டு அறிக்கைகள்/ஆய்வு அறிக்கைகள் | |
| | iii. சுயாதீன வெளியீடுகள் | |
| | iv. வெளியிடப்பட்ட கல்விசார்/ஆய்வுசார் கட்டுரைகள் – தேசிய/சர்வதேச | |
| 4. | மேலதிக செயற்பாடுகள் | 10 புள்ளிகள் |
| | i. விளையாட்டு | |
| | ii. சமூக சேவை/சங்கங்கள், அமைப்புகள்/சமுதாய நிகழ்ச்சிகள் | |
| 5. | ஆளுமை | 15 புள்ளிகள் |
| 6. | தொடர்புடைய துறை பற்றிய பொது அறிவு | 15 புள்ளிகள் |
| | **மொத்தம்** | 100 புள்ளிகள் |
| | * **குறிப்பு**: சமமான தகைமைகள்/சமமான பங்களிப்புகளுக்கு மேற்குறிப்பிட்ட புள்ளிகளில் 50% மட்டுமே வழங்கப்படும். | |

4. **சம்பள அளவுத்திட்டம் :**

AR – 1 2025 ரூபா 91,650.00 – 10 x 2480-15x3450 = ரூபா 168,200.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 81,675.00

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் III - 01

1. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

2. **கல்வித் தகைமை : வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/மனிதவள முகாமைத்துவம் /அரசாங்க நிர்வாகம்/ அரசாங்க முகாமைத்துவம் / சமூக விஞ்ஞான துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் :**

(1) உள்ளக விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த துறையில் மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| வேறு அடைவுகள்/திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலில் காட்டப்படும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

4. **சம்பள அளவுத்திட்டம் :**

MA 3 2025 – ரூபா 53,940.00 – 10 x 800 – 11 x 1190 – 10 x 1320 – 5 x 1350 = ரூபா 94,980.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 49,831.00

பதவி : ஒலி-ஒளி தொழில்நுட்பவியலாளர் III – 01

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

4. **கல்வித் தகைமை : வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும், தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 அல்லது அதற்கு மேற்பட்ட ஒலி-ஒளி தொழில்நுட்பத் துறைக்கான தொழில்நுட்பத் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

உள்ளக விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| | |
|---|---|
| தொடர்புடைய மேலதிக தொழில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல்திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

4. **சம்பள அளவுத்திட்டம் :**

MA 2-2 2025 – ரூபா 50,540.00 – 10 x 540 – 7 x 630 – 4 x 1080 – 20 x 1280 – ரூபா 90,270.00 (2027.01.01 ஆம் திகதியிலிருத்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 46,960.00

5. பதவியில் நியமனம் செய்வதற்கான நிபந்தனைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதங்களுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புகளை செலுத்த வேண்டும்.
4. மூன்று (03) வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்பட்டிருத்தல்.

**சேவை நிபந்தனைகள்**

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் முறைக்கு அமைவாக, நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து தகுதி வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது முழுமையான சுயவிபரத் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026.09.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவி, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

முழுமையற்ற, தெளிவற்ற அல்லது காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறைகளினூடாக பட்டியல்படுத்தப்படும்

(அரசுத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.)

பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதூவை,
2026, செத்தெம்பர் 11.

09-144

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியில் காணப்படும் 64 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தேவையான தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் :**

| *கல்வித் தகைமைகள்* | *தொழில்சார் தகைமைகள்* |
|---|---|
| சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகள் சகிதம் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல் | 01. தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் கொள்ளப்படுகின்ற அல்லது அத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றைப் பூரணப்படுத்தியிருத்தல்.<br>i. 03 வருட பகுதி நேர தேசிய தொழிநுட்பவியல் சான்றிதழ் (மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல்) National Certificate in Technology (Electrical & Electronic Engineering)<br>ii. 02 வருட முழு நேர கைத்தொழில் தொழினுட்பவியல் பற்றிய தேசிய சான்றிதழ் (மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல்) National Certificate in Industrial Technology (Electrical & Electronic Engineering)<br>iii. 02 வருட முழு நேர தேசிய டிப்ளோமா சான்றிதழ் (மின் தொழினுட்பவியல்) National Diploma in Electrical Technology<br>iv. 02 வருட முழு நேர தேசிய டிப்ளோமா சான்றிதழ் (மின் தொழினுட்பவியல்;) Naional Certificate in Electrical Technology<br><br>அல்லது<br><br>02. மொறட்டுவையில் அமைந்துள்ள கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தினால் (Industrial Engineering Training Institute) வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றை பூரணப்படுத்தியிருத்தல்.<br>i. மின்னணுவியல் தொழிநுட்பவியலாளர் பாடநெறி (Electronics Craftsman)<br>ii. மின் தொழிநுட்பவியலாளர் பாடநெறி (Electrician)<br><br>அல்லது<br><br>03. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் கொள்ளப்படும் நிறுவனமொன்றினால் அல்லது அந் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 05 ஆம் மட்டம் உள்ளடங்கும் கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றை பூரணப்படுத்தியிருத்தல்.<br>i. மின் தொழினுட்பவியல் பற்றிய தேசிய டிப்ளோமா - National Diploma in Electrical Technology (Full Time)<br>ii. மின் தொழினுட்பவியல் டிப்ளோமா Diploma in Electrical Technology<br>iii. 03 வருட மின் தொழினுட்பவியல் டிப்ளோமா Diploma in Electrical Technology (03 Years Part Time)<br>iv. மின் தொழினுட்பவியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - Higher National Diploma in Electrical Technology<br>v. மின் தொழினுட்பவியல் பற்றிய தேசிய சான்றிதழ் - National Certificate in Electrical Technology (NCIT – Electrical)<br>vi. 03 வருட பகுதி நேர மின் தொழினுட்பவியல் பற்றிய தேசிய டிப்ளோமா - National Diploma in Electrical Technology (03 Years - Part Time)<br><br>அல்லது |

| *கல்வித் தகைமைகள்* | *தொழில்சார் தகைமைகள்* |
|---|---|
| | 04. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அதன் கீழ் உள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உயிரியல் மருத்துவ உபகரண தொழில்நுட்பவியல் (Bio Medical Equipment Technology) 06 ஆம் மட்ட தகைமையினை பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>05. அரசினால் வழங்கப்படும் மின்னியல்/ மின்சாரவியல் தொடர்பான தேசிய தொழில்நுட்பவியல் பாடநெறியொன்றினைப் பயின்று 17.11.2015 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 22/2015 இன் படி 30.10.1990 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 46/90 VI இன் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல். |

2.2 **அனுபவம்**: மின் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவியுடன் தொடர்புறும் வண்ணம் அரசாங்க அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனுமோர் தனியார் துறை நிறுவனமொன்றில் குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாக கருத்திற் கொள்ளப்படும்.

2.3 **உடலியல் தகைமைகள் :** அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை யாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதியளவு உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

2.4 **ஏனையவை:**

I. இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

III. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான அனைத்து தகைமைகளையும் 2026, ஒற்றோபர் 12 ஆந் திகதியாகுகையில் அனைத்து விதங்களிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

2.5 **வயது**:

I. குறைந்த வயதெல்லை : 18 வருடங்களுக்கு குறையாத

II. உச்ச வயதெல்லை : 35 வருடங்களுக்கு மேற்படாத

03. **ஆட்சேர்க்கும் முறை:**

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்த புள்ளிகள்* | *தேர்ச்சி புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. எழுத்துப் பரீட்சை<br>I. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு<br>II. விடயம் சார் பொது அறிவு | பாடத்திட்டம் கீழ் காட் டப்பட்டுள்ளது | 01 மணித்தியாலம்<br>01 மணித்தியாலம் | 100<br><br>100 | 50%<br><br>50% |
| 2. தொழில்சார் செயல்முறைப் பரீட்சை | | 02 மணித்தியாலங்கள் | 100 | 50% |

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியிலான சிந்தனை, அவரது பகுப்பாய்வு சிந்தனைத் திறன் மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல்கள் என்பவற்றை மதிப்பிடுவதற்கான வினாக்களை கொண்டதாகும். |

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| விடயம் சார் பொது அறிவு | மின்னோட்டவியல் - நேரோட்ட மின்னோட்டவியல், ஓமின் விதி, கிர்ச்சாபின் விதி, மின்னழுத்த வேறுபாடு, மின்னோட்டத்தை அளவிடும் முறைகள்.<br>காந்தவியல் - மின் காந்தவியல்<br>நிலை மின்னியல் - கூலோமின் விதி<br>அலைகள் - மின்காந்த அலைகள்<br>மின்னணுப் பௌதிகவியல் - அரைகடத்தி இருமுனையங்கள் மற்றும் திரான்சிஸ்டர்கள்<br>வெப்பம் - விரிவடைதல், நீள் விரிவுக் குணகம்<br>கணிதம் - திரிகோணமிதி சார்புகள்<br>நியூட்டனின் பௌதிகவியல்<br>மின் இயந்திரங்கள் - (D.C மோட்டார், A.C மோட்டார், மின் மாற்றிகள்) |

| | |
|---|---|
| தொழில்சார் செயல்முறைப் பரீட்சை | துறையுடன் தொடர்புறும் அடிப்படை அறிவு, உபகரணங்களை பொருத்துதல், பழுதுபார்த்தல் பற்றிய அறிவு, குறித்த துறையின் உபகரணங்களது பழுதுகளை இனங்காணுதல், துறையுடன் தொடர்புறும் உபகரணங்களை உபயோகித்தல் பற்றிய அறிவு, ஒரு அவத்தை மோட்டார்கள், மூவவத்தை மோட்டார்கள், நேரோட்ட மோட்டார்கள், மூவவத்தை வெப்பமூட்டும் சுருள்கள், அலைநோக்கியின் பயன்பாடு, ஸ்டார்-டெல்டா சுற்றுகள், மின் வழங்கிச் சுற்றுகள் தொடர்பான அறிவினைப் பரிசோதித்தல் |

04. **மாதாந்த சம்பளக் கட்டமைப்பு மற்றும் சம்பளப் பரிமாணம்:**

ரூபா 50,090-10 x 540 - 10 x 630 - 11 x 1,010 - 10 x 1,190 - ரூபா 84,420.00

MT - 1 (பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 10/2025 உப அட்டவணை (II) இன் படி)

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற உடன்படுதல் வேண்டும்.

(ii) நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு உரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வண்ணம் அதற்கான பங்களிப்புத் தொகைகளை செலுத்துதல் வேண்டும்.

(iii) இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி அடைதல் வேண்டும்.

(iv) பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி மற்றும் அதனுடன் தொடர்புறும் சுற்றுநிருபங்களின் படி பதவியில் நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரிய அரச மொழி பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(v) பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், அரசினால் வெளியிடப்படும் சுற்றுநிருப விதிமுறைகளுக்கும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் பொது விதிமுறைகளுக்கும் இந்த நியமனம் உட்படுகின்றது.

(vi) தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலமே, தாங்கள் நியமனம் பெறத் தகுதி பெறுகின்ற மொழிமூலம் ஆகும்.

06. **விண்ணப்பிக் வேண்டிய முறை :**

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி விண்ணப்பங்களைத் தயாரித்து, விண்ணப்பங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் (திறந்த) – 2026" எனக் குறிப்பிட்டு 2026.10.12 ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, நிர்வாகம் 07 ஆம் கிளை, இலக்கம் 106, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2026.10.12.

(இ) பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 ஆகும். இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் "சுகாதார செயலாளர்;" பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 இற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் ஏதேனுமோர் கிளைக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்படல் மற்றும் வேறோர் பரீட்சை அல்லது விடயத்திற்காக செல்லுபடியாகும் என கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. மேலும், விண்ணப்பத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடத்தே வைத்திருத்தல் தகுந்ததாகும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஈ) விண்ணப்பத்தினை தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப் பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற எந்தவித மாற்றங்கள் பற்றியும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

07. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வண்ணம் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை ;
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தினுள் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் நுழைந்ததில் இருந்து பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை உத்தியோகத்தர்களுக்கு பரீட்சார்த்தியை இனங்கான இயலும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அது பற்றி பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களுக்கு அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந்த விதிகளுக்கு மாற்றமாக செயற்படும் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்காதிருக்கும் / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

08. **கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்:**

அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ஆணை பெற்ற முப்படை உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின் / கல்வி நிர்வாக சேவையின் / அரசாங்க கணக்காளர் சேவையின் ரூ. 854,880.00 இலும் கூடிய திரட்டிய வருடாந்த அடிப்படை சம்பளமொன்றினைப் பெறும் நிரந்தர அரசாங்க பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

09. **போலியான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பத்தினை நிரப்புகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்த பரீட்சையின் சட்ட திட்டங்களின் படி விண்ணப்பதாரி ஒருவர் வழங்கியுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிரூபணமாயின், அதற்கு ஏற்புடைய சட்டரீதியான செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. **பரீட்சை நிபந்தனைகள்:**

i. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் 2026.10.12 ஆந் திகதி யாகுகையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். உரிய தகைமைகளை பூரணப்படுத்தியிராத விண் ணப்பதாரிகள் பரீட்சையில் போதியளவு புள்ளி களைப் பெற்றிருப்பினும் நியமனம் பெறத் தகுதி யற்றவர்கள் ஆவர்.

ii. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பபடிவத்தின் படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

iii. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

iv. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணபித்துள்ளார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத்தரப்படும்.

v. ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் செயல்முறைப் பரீட்சை என இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

vi. முதலில் எழுத்துப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் இருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்க்க உத்தேசிக்கும் எண்ணிக்கையினைப் போன்ற இரண்டு மடங்கினர் தொழில்சார் செயல்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தொழில்சார் செயல்முறை பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்களுள் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்ப தாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களில் நியமிக்கப்பட உள்ளார்கள்.

vii. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்ற முடிவதுடன், விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே பதில் அளித்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்ளவும்:**

(அ) விண்ணப்பத்தின் அனைத்து பிரிவுகளும் பூரணப் படுத்தப்பட்டுள்ளதாக மற்றும் அத்தகவல்கள் சரியானவை என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பற்றி கவனத் திற் கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறின்றி விண் ணப்பத்துடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத ஆவணம் அல்லது அதன் பிரதியினை இணைத்தல் கூடாது.

(இ) விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பிலான தோர் கடிதம் தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதென மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப் படமாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப் பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்குதல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண் ணிக்கை, பதவிகளுக்காக நியமிக்கப்படும் எண் ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக் கப்படும். வெற்றிடங்களின் ஏதேனுமோர் எண்ணிக் கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(உ) இப் பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்வாங்கப்படும் அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் சிக்கலானதோர் நிலை ஏற்படுமாயின் அது பற்றிய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும். அவ்வாறே, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களிடையே ஏதேனுமோர் முரண்பாடு அல்லது பொருந்தாமை அல்லது வேறுபாடுகள் உள்ளமை காணக் கிடைப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ,**
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,
“சுவசிரிபாய”,
இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2026, ஓகத்து 22.

**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு – 03 ஆம் சேவை வகையின் மின் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்: வதிவிட மாவட்டம்: ☐

(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E) ☐

(குறித்த ஆங்கில எழுத்தினை கூண்டினுள் எழுதவும்)

01.

(i) முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

(ii) முழுப் பெயர்: ...............................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss ......................................................................

(ஆங்கில் பேரெழுத்துக்களில்) உதாரணம்: Mr./~~Mrs./Miss~~ SILVA A. B.

(iv) முழுப் பெயர்: ..............................................................................................................

(ஆங்கில பேரெழுத்துக்களில்)

02. வதிவிட முகவரி

I. நிரந்தர வதிவிட முகவரி: .............................................................................................

(ஆங்கில பேரெழுத்துக்களில்)

II. நிரந்தர வதிவிட முகவரி: ............................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

03. பிறந்த திகதி:

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.1 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ...............................................................................

05. தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட (கையடக்க) : ............................ வட்ஸ்அப் : .................

06. மின்னஞ்சல் முகவரி : ...................................................................................................

07. பால் : ஆண் : ☐ பெண் : ☐

08. இலங்கைப் பிரசையா என்பது பற்றி : ஆம் : ☐ இல்லை : ☐

09. விவாகமானவரா/ விவாகமாகாதவரா : .................................................................................

10. **கல்வித் தகைமைகள் :**

(அ) கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை:

வருடம்: .................... சுட்டெண்: .......................

| *தொ. இ.* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) **தொழில்சார் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள்**

| *சான்றிதழ்* | *வழங்கிய நிறுவனம்* | *வருடம்* | *பாடங்கள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(தொழில்சார் மற்றும் தொழிநுட்பத் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.)

(இ) வேறு விசேட தகைமைகள் மற்றும் அனுபவம்:

..............................................................................................................................................

..............................................................................................................................................

11. **சேவை வரலாறு :**

i. இதற்கு முன் அரசாங்க சேவையில் பதவியொன்றினை வகித்துள்ளீர்களா? : ......................
ii. ஆம் எனில் குறித்த பதவி : ....................................................
iii. சேவை நிலையம் : ....................................................
iv. நியமனத் திகதி : ....................................................
v. விலகிய திகதி : ....................................................
vi. விலகியமைக்கான காரணம் : ...................................................

12. தாங்கள் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்காக என்றாவது ஒரு நாள் நீதிமன்றத்தில் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா? ....................................

(ஆம் எனில் விபரங்களை வழங்கவும்): ...........................................................................................................................
..............................................................................................................................................................................

13. பரீட்சைக் கட்டணம் செழுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:

    I. பரீட்சைக் கட்டணம் செழுத்திய வங்கிக் கிளை : ..............................................................

    II. செழுத்திய தொகை : ..........................................................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றுக்கு ரூ. 1,000.00 எனும் தொகையினைச் செழுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும் (விண்ணப்பத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருத்தல் பின்பு பிரயோசனப்பட முடியும்) |

14. விண்ணபதாரியின் உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் என கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் உள்ளடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அந்த விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி மற்றும் அதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகளின் கீழ் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி: .........................................                ...........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணபதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .......................... ஆந் திகதி அவரது ஒப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,
முழுப் பெயர்: .......................................................
பதவி : .......................................................
